

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களை நேற்று (6.3.2024) முகாம் அலுவலகத்தில் உலக மகளிர் தினத்தையொட்டி, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி மற்றும் கழக மகளிர் அணி நிருவாகிகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.3.2024) தலைமைச் செயலகத்தில், கிராமி விருது பெற்ற செல்வகணேஷ் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### கொளத்தூரில் ரூ.36.99 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு!

# ரூ.205 கோடி மதிப்பிலான பணிகளுக்கு அடிக்கல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று நல உதவிகள் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 9 - கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ரூ.36.99 கோடி செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.205.40 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, மாணவ, மாணவியர்களுக்கு நலத்திட்ட உதவிகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.3.2024) கொளத்தூர், மேயர் சிட்டிபாபு பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடலில் நடைபெற்றநிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 10.13 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 15 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 28.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், உழவர் சந்தை பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நீர்வள ஆதாரத் துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை ஆகிய துறைகளின் சார்பில் 26.86 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 2 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 176.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேயர் சிட்டிபாபு பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப்பணிகள்

மேயர் சிட்டிபாபு மேம்பாலம் அருகில் 1.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மேயர் சிட்டிபாபு பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டு மைதானம், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ஜி.கே.எம்.காலனி, 34ஆவது தெருவில் 35 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், ஜம்புலிங்கம் பிரதான சாலையில் 45 இலட்சம் ரூபாய் செலவில் நீத்தார் நினைவு மண்டபம் மற்றும் 35 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்கு மையக் கட்டடம், பள்ளி சாலையில் 34.90 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்குக் கட்டடம், பல்லவன் சாலையில் 35 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்குக் கட்டடம், ஜவஹர் நகர்2ஆவது குறுக்குத் தெருவில் 35 இலட்சம் ரூபாய் செலவில் மேசை விளை யாட்டுக் கூடம் (Table Tennis Hall);

கொளத்தூர் 200 அடி உள்வட்டச் சாலையில் 94.40 இலட்சம் ரூபாய் செலவில் 150 வாட்ஸ் திறன் கொண்ட 88 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள், சீனிவாசன் நகர்6ஆவது தெருவில் 35 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட குளம் மற்றும் நடைபாதை, வெற்றி நகர், கண்ணியப்பன் தெருவில் 34.80 இலட்சம் ரூபாய் செலவில் நகர்ப்புர நலவாழ்வு மையம் (Health and Wellness Centre), பல்லவன் சாலையில்

24.43 இலட்சம் ரூபாய் செலவில் திறந்தவெளி உடற்பயிற்சிக்கூடம், கோவில் சாலை முதல் குறுக்குத் தெருவில் 7.05 இலட்சம் ரூபாய் செலவில் இசேவை மையக் கட்டடம், சோமையா ராஜா தெரு சென்னை உயர்நிலைப் பள்ளியில் 9 இலட்சம் ரூபாய் செலவில் மாணவர்கள் உணவருந்தும் கூடம், ஜெகநாதன் சாலையில் 33.56 இலட்சம் ரூபாய் செலவில் உதவி செயற்பொறியாளர் (பகுதி15) அலுவலகக் கட்டடம், பந்தர் கார்டன் சென்னை பள்ளியில் 4.37 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட 5 பள்ளிக் கட்டடங்கள்;

என மொத்தம் 10.13 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 15 திட்டப்பணி களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**சென்னை மாநகராட்சி சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

திரு.வி.க.நகர் மண்டலம், கொளத்தூர், வார்டு64 முதல் 70 வரையுள்ள பகுதிகளில் 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 மீ. உயரம் கொண்ட 10 உயர்கோபுர மின்விளக்குகள், நேர்மை நகர் மயானபூமியில் 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக எரிமேடை, ஜெகநாதன் தெரு பல்நோக்குக் கட்டடத்தில் 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக முதல் தளக் கட்டடம்;

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், முத்துகுமாரப்பா சாலையில் 13.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் தரைத்தளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய சமுதாய நலக்கூடம், அமிர்தம்மாள் காலனியில் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பூப்பந்தாட்ட மைதானம், லோகோ ஓர்க்ஸ் சாலையில் 1.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குத்துச்சண்டை உள்விளையாட்டு அரங்கம்;

மூலதன நிதியின் கீழ், ரங்கசாயி தெருவில் பழுதடைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி கட்டடத்தை இடித்துவிட்டு 2.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய 10 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம், சோமை யா ராஜா தெருவில் பழுதடைந்துள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி கட்டடத்தை இடித்துவிட்டு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய 10 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம்;

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், மாதவரம் நெடுஞ்சாலை, இலட்சுமி அம்மன் கோவில் தெரு சந்திப்பில் 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன கட்டடமைப்புகளுடன் புனரமைக்கப்படவுள்ள பேருந்து நிழற்குடை;

கபிலர் தெரு சென்னை நடுநிலைப் பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், 1.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிழக்குப் பகுதி கட்டடத்தினை புனரமைத்தல், கபிலர் தெருவிலுள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில்

4.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுதடைந்துள்ள கட்டடத்தினை இடித்துவிட்டு தரை, முதல் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய 21 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் கட்டும் பணி;

என மொத்தம் 28.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 புதிய திட்டப்பணி களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார்.

கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள உழவர் சந்தையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்

நீர்வள ஆதாரத் துறையின் சார்பில் 7.30 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட கொளத்தூர் ஏரி;

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் வீனஸ் நகர் பகுதியில் 19.56 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கழிவுநீர் உந்து நிலையம்;

என மொத்தம் 26.86 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 2 திட்டப்ப ணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 55 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேப்பர் மில்ஸ் சாலையில் அமைக்கப்படவுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன சந்தை, கொளத்தூர், ஜெகன்நாதன் சாலையில் மாற்றுத்திறனாளிக்கான மறுவாழ்வு மையம் மற்றும் நவீன ஆய்வகம், பெரியார் நகர் பேருந்து நிலையத்தை நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக மேம்படுத்துதல்;

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் சிவானந்த நகரில் உள்ள தெருக்களுக்கு 6.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் பெரியார் நகர், பணிமனை 65 மற்றும் 68ல் 44.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர் கட்டமைப்புகள்;

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் 200 அடி சென்னை உள்வட்டச் சாலை, செந்தில் நகர் சந்திப்பில் 15.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகரும் படிக்கட்டுடன் கூடிய நடைபாதை மேம்பாலம்;

பொதுப்பணித்துறையின் சார்பில் பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் தற்போது பணி நடைபெற்று வரும் கட்டடத்தில் 54.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 4, 5 மற்றும் 6ஆவது தளங்கள் கட்டும் பணி;

என மொத்தம் 176.90 கோடி ரூபய் மதிப்பீட்டில் 7 புதிய திட்டப்பணி களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, முத்து குமாரப்பா சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயின்ற 355 மாணவ, மாணவி யருக்கு தையல் இயந்திரங்கள், 127 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகள், 250 மாணவ, மாணவியருக்கு கல்லூரிக் கட்டணம் மற்றும் 750 பயனாளிகளுக்கு டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் சார்பில் மூக்குக் கண்ணாடிகள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், பணிகளை ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் . ககன்தீப் சிங் பேடி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெண் குழந்தைகளின் பிறப்பு பாலின விகிதத்தை உயர்த்துவதில்

# சிறப்பாகச் செயலாற்றிய 3 மாவட்ட ஆட்சியர்களுக்கு பதக்கங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்பித்தார்!

**சென்னை, மார்ச் 9- பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாகச் செயலாற்றிய இராமநாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான பதக்கங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.3.2024) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் பெண் குழந்தைகளின்பிறப்புபாலினவிகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாக செயலாற்றிய இராமநாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்ட நிர்வாகங்களின்சார்பில்அம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளிமற்றும்வெண்கலப் பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார்.

**பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாகச் செயலாற்றிய மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு பதக்கங்கள்**

தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளின்பாலினவிகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றி சாதனைபுரிந்தமுதல்மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு முறையே தங்கம், வெள்ளி மற்றும்வெண்கலப்பதக்கங்கள்மற்றும்பாராட்டுபத்திரங்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்புநாளில்தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

2023-2024ஆம்ஆண்டில், மாவட்டத்தின் பிறப்பு பாலினவிகிதம், 5வயதிற்குட்பட்டகுழந்தைகள்இறப்புவிகிதம், உயர் பிறப்பு விகிதம் மற்றும் கருத்தரிப்பு மற்றும் மகப்பேறுக்கு முந்தைய பரிசோதனைநுட்பங்கள், சட்டம் ஆகிய காரணிகளை கவனமுடன் பரிசீலித்து, இராமநாதபுரம், காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்டநிர்வாகங்கள்தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாவட்ட நிர்வாகங்கள் சிறப்பாக செயலாற்றியுள்ளதை பாராட்டி, முதலமைச்சர்அவர்கள்இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பி. விஷ்ணு சந்திரன், அவர்களுக்கு தங்கப் பதக்கமும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், அவர்களுக்கு வெள்ளிப்பதக்கமும், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால்சுன்கரா, அவர்களுக்கு வெண்கலப் பதக்கமும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி. வே. அமுதவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட

# தொழிலாளர் உதவி ஆய்வாளர்களுக்கு பணி நியமன ஆணை!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

*சென்னை, மார்ச் 9-* தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி II தேர்வுகளில் தொழிலாளர் துறைக்கு தேர்வு செய்யப்பட்ட 37 தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் மற்றும் வேலை வாய்ப்பு பிரிவில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்கள், 8 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகள்), உதவி பயிற்சி அலுவலர் (சுருக்கெழுத்து - ஆங்கிலம்) தொழிற்பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட இருவர் மற்றும் இளநிலை உதவியாளராகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் என மொத்தம் 59 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள தொழிலாளர் நலத்துறையின் கூட்டரங்கில் நேற்று (08.03.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர், சி.வெ. கணேசன் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும், 2021-22 மற்றும் 2022-23-ஆம் ஆண்டுகளில் சிறப்பாக பணிபுரிந்த அரசு தொழிற்பயிற்சி நிலைய துணை இயக்குநர் / முதல்வர்கள் நால்வர், பயிற்சி அலுவலர்கள் நால்வர், உதவி பயிற்சி அலுவலர் எட்டு பயிற்றுநர்கள் மற்றும் இளநிலை பயிற்சி அலுவலர் 8 பயிற்றுநர்கள் என மொத்தம் 24 அலுவலர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகளையும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், முதன்மை செயலாளர்/ தொழிலாளர் ஆணையர், முனைவர் அதுல் ஆனந்த், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மற்றும் தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலையில்

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் நலத்திட்ட உதவிகள்!

## கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் வழங்குகிறார்! க.வினோத் தலைமை!

*சென்னை, மார்ச் 9-* சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் "மக்கள் முதல்வரின் மனிதநேய விழா" "மண்பாண்டம் செய்பவர் ஆதிக் கலைஞர்! மண்வாழ உழைப்பவர் இரண்டாம் கலைஞர்! எனும் தலைப்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (10.3.2024 ஞாயிற்றுக் கிழமை) காலை 8 மணிக்கு, லட்சுமி மகால், பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க. வினோத்தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சொ.வேலு, வி.சுதாகர், டி.லோகேஷ், சரிதா மகேஷ்குமார், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், கோ.மணி, ஜி.தாமோதரன், வே.உமா காந்த், க.நந்தீஸ்வரன், அ. நிர்மலா தேவி, எல். சுந்தர்ராஜன், ஆர்.டி.சங்கர் நானா, சே.பாலாஜி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா. ஜெகதீஸ், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

கழக இளைஞர் அணி துணை செயலாளர் எஸ். ஜோயல் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி, இ.பரந்தாமன், அ.வெற்றியழ கன், ஜோசப் சாமுவேல் மற்றும் கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பரிதி இளம் சுருதி,

எம்.தில்லைகுமார், பி.சி. சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், கே.வள்ளி, சூளை சுப்புராயலு, எஸ்.ரசூல், டி.வி. வேலு, எம்.மலர்மாறன், கே. அன்ன பூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர் எம் ரங்கநாதன் சி. சேகர், தி.தயாளன், டால்பின் எஸ்.அரி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன், கே.வி. சிவகுமார்,

பி.சங்கர், எம்.ஆர்.விஜய், ஜெ.சிலம்பரசன், ஜி.சந்தோஷ், ஐ.பிலால், சி.பாலாஜி, என். ஜெ.மதன்குமார், ஆ.ஜெபா (எ) அஜித்குமார், பி.கார்த்திக், இரா.அரிபாபு, மு.கிருஷ்ண மூர்த்தி, வே.சம்பத், உஷா ஜெகதீசன், த.பொற்செழி யன், ப.கருணாநிதி, எஸ்.தனசேகர், வி.விவேகானந்தன், க.ஜெகதீசன், வி.முரளி, எம்.மனோகரன், ம. ராஜேந்திரன், வே.மோகன், வி.ஜான்சி, எஸ்.ராஜேந்திரன், சி.குணசேகரன், சி.தமிழ்செல்வன், ப.பன்னீர் செல்வம், எம்.பாலாஜி, பா. லோகேஷ் மற்றும் கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

78 வது வட்டக் கழகச் செயலாளர் சு.மனோகர், 78 (அ) வட்டக் கழகச் செயலாளர் ந.பாலு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.




உலக மகளிர் தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி உத்திரமேரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மகளிருக்கு வாழ்த்துகள் தெரிவித்து புடவைகளை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் .கெ. ஞானசேகரன் டி.குமார், மாவட்ட முன்னாள் ஊராட்சி குழு உறுப்பினர் திருமதி.க.சு.வசந்த ராணி சுந்தர், வட்டார வளர்ச்சி அலுவலர் பாலாஜி, ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி.ஹேமலதா, ஞானசேகரன், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார், துணை பெருந்தலைவர் திருமதி. வசந்தி குமார் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜ், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கோ.சிவராமன் மற்றும் ஒன்றிய பேரூர் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



ஒருங்கிணைந்த கல்வி இயக்கம் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கென ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் திட்ட ஒப்புதல் குழுவால் (Project Approval Board) 2023-24'ஆம் கல்வியாண்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 3வது மற்றும் 4வது தவணை தொகையான ரூ.1,138 கோடி இன்னும் முறையாக வழங்கப்படாமல் உள்ளது. எனவே அந்தத் தொகையை விரைவாக தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு வழங்கிடுமாறு தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களை நேற்று டெல்லியில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார். அப்போது தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் குமரகுருபரன், அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்ட இயக்குநர் திருமிகு.ஆர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.